## சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.249/2020

நாள்: 09.03.2026

பி.வா.சா.1 – ஆனந்தபாபு

2026–ம் ஆண்டு மார்ச் 09–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.1–ல் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1–ல் 2வதாக தங்ககேல் கையொப்பம் செய்துள்ளது என் தந்தை என்றால் சரிதான். முதலாவதாக கையெழுத்து போட்டுள்ளது வாதி என்றால் சரிதான். ரூ.6 லட்சத்திற்காக வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பணத்தை திருப்பி கொடுத்துவிட்டோம். நான் முழு பணத்தையும் திருப்பிக் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் தந்தை தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை போக்கியமாக வாதி அனுபவித்து கொண்டு இருக்கும்போது இறந்த என் தந்தை தங்கவேல் 05.07.2019 ஆம் தேதி நிலத்தினை விற்கபோவதாகவும் நிலத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டி கேட்டுக்கொண்டதால் வாதி தாவா சொத்துக்களை எனது தந்தையிடம் சுவாதீனம் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. அந்த தேதியில் என் தந்தை உடல்நிலை சரியில்லாமல் சென்னையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். அந்த தேதியில் என்னுடைய தந்தை சொந்த ஊரில் தான் இருந்தார் என்றாலும் சென்னையில் சிகிச்சை பெற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போக்கிய பணத்தை திருப்பிக்

கொடுக்காததால் வாதி எனது தந்தைக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு வரவில்லை. மேற்படி அறிவிப்பை என் தந்தை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பி வைத்துவிட்டார் என்றால் சரியல்ல. 19.08.2019–ல் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. 22.08.2019–ல் என் தந்தை இறந்துவிட்டார். என் தந்தை இறந்ததால் தான் என் தந்தையின் வாரிசுகளான நானும், என்னுடைய சகோதரி மற்றும் தாயார் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளோம் என்றால் சரிதான். வழக்கு விவரம் தெரிந்து தான் வாதியிடம் நாங்கள் பஞ்சாயத்து செய்தோம் என்றால் வழக்கு விவரம் தெரியாது. நான் தான் சிவக்குமார், தர்மராஜ் மற்றும் பன்னீர் ஆகியோர்களை அழைத்து வந்து பஞ்சாயத்து செய்தேன் என்றால் சரியல்ல. வாதி தான் அவர்களை அழைத்து வந்தார். அந்த பஞ்சாயத்தில் நான் ரூ.4 லட்சம் தருவதாக சொன்னதை வாதி ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வாதி ஒப்புக்கொண்ட பின்பு தான் பணத்தை திருப்பிக் கொடுத்தேன். நான் ரூ.6 லட்சம் திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டோன் என்றாலும் அந்த தொகையை 4 தவணைகளாக தலா ரூ.1.50 லட்சம் திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டேன் என்றால் சரியல்ல. 1 தவணையாக ரூ.1.50 லட்சத்துக்கு பதிலாக ரூ.1.45 லட்சம் மட்டும் வங்கி மூலமாக திருப்பி கொடுத்தேன் என்றால் சரியல்ல. பாக்கி ரூ.5 ஆயிரத்தை வாதி கேட்டதற்கு அடுத்த தவணையில் சேர்த்து செலுத்தவதாக கூறினேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1–ல் என்னுடைய கையழுத்து உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய தாயார் கையெழுத்து மட்டும் உள்ளது. பி.வா.சா.ஆ.1–ல் உள்ள கையெழுத்து வாதியின் கையெழுத்து இல்லை என்றாலும் போர்ஜரியாக வாதியின் கையெழுத்து போடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.1–ல் முத்திரைத் தாளில் யாருடைய கையெழுத்தும் இல்லை என்றால் சரிதான். ரூ.2.55 லட்சத்தை

நான் வாதியிடம் ரொக்கமாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதியின் பணத்தை மோசடி செய்ய வேண்டும் என்பதால் பி.வா.சா.ஆ.1–ல் ஆவணத்தை நான் போர்ஜரியாக தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி எங்களிடம் நிலத்தை ஒப்படைக்கும்போது போர்வெல் நன்றாக தான் இருந்தது என்றால் சரியல்ல. எதிர் வழக்குரையில் போர்வெல்லை வாதி சேதப்படுத்தியதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. போக்கிய தொகை ரூ.6 லட்சத்தில் நான் செலுத்திய ரூ.1.45 லட்சம் போக மீதி தொகையை நாங்கள் திருப்பி செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு எதிராக எந்த ஒரு நஷ்டஈட்டு வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளபடி வாதி நஷ்டஈடு கொடுக்க கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல. வாதியின் வழக்கை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2 (FAC),
ஜெயங்கொண்டம்.